**கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று நேரில் முறையில் சமர்ப்பிக்கப்பட்ட போது, காசுச் சீராக்கங்களில் எந்த விளைவையும் ஏற்படுத்தியிருக்காத ரூபா 32,914,139 வருடாந்த பெறுமானத்தேய்வு செயற்பாட்டு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 05 உருப்படிகள் தொடர்பான தொழிற்படு மூலதனத்தின் மாற்றங்களின் கீழ் காட்டப்பட்ட தொழிற்படு மூலதனத்தின் உண்மையான வேறுபாட்டிற்கும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கும் இடையே ரூபா 81,546,424 வேறுபாடு காணப்பட்டது. | காலக்கிரமத்தில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் சரியாக மேற்கொள்ளப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள ரூபா 7,367,999 பெறுமதியான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்களில் 04 வகை சொத்துக்கள் தொடர்பான ரூபா 4,162,725 கிரயமான சொத்துக்கள் மாத்திரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இற்கு முரணாக கிரயத்திற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, முன்னைய ஆண்டு சீராக்கங்களாக கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவை நிதியாண்டின் இறுதியளவில் கிரய அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்ததால் அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை, வருடாந்தம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கை நடைமுறையில் காணப்படவில்லை, மேலும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும், பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட போதிலும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட கிரய பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 79,193,786 பெறுமதியான சொத்து இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியளவில் பணிக்கொடையானது தொழில் ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் பணிக்கொடையானது யதார்த்தமான மூலோபாயங்களின் (actuarial strategies) பிரகாரம் ரூபா 5,977,630 ஆல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | நிபுணர் ஒருவருக்கு ஏற்படும் அதிக கிரயங்கள் காரணமாக, நிபுணரின் விலைவிகிதங்களின் அடிப்படையில் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டது. | கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தால் பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட உதவிகள் மற்றும் நன்கொடைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் கணக்குகளுக்கு கொண்டு வரப்படுவதற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. ரூபா 514 மில்லியன் பெறுமதியான ஏற்கனவே பெறப்பட்ட உதவி தொடர்பான நிறுவனங்களுக்கான பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் சரியாக வெளிப்படுத்தப்படும். | உதவி மற்றும் நன்கொடைகளின் பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் | சொத்துக்கள் சரியாக கணக்குகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலைகளின் பெறுமதியாக ரூபா 51,743,291 தொகை காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள சொத்துக்களில் நிறுவனத்தால் ரூபா 43,246,410 பெறுமதியான சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே, சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மற்றும் பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் பெறுமதி ஆகியவை நிதிக்கூற்றுக்களில் அத் தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | சரியான பெறுமதி சமர்ப்பிக்கப்படும். | கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) | வாழை செடிகள் தொடர்பான நடைமுறை வேலையின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியளில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பேரேடுகளில் முறையே ரூபா 68,970 மற்றும் ரூபா 758,093 ஆக காட்டப்பட்டிருந்ததால் அப் பெறுமதிகளிற்கு இடையே ரூபா 689,123 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது, ஆனால் அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் வருகை தரும் விரிவுரையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 202,500 தொகையான விரிவுரை கட்டணம் அந்த ஆண்டின் செலவினமாகக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குத் தயாரிக்கப்பட்டது வரை சமர்ப்பிக்கப்பட்ட செலவினங்கள் மாத்திரமே 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரியான பெறுமதியை சமர்ப்பிக்கும் நோக்கில் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டது. | வேறுபாடு இனங்காணப்பட்டு சீர்செய்யப்பட வேண்டும், மேலும் ஆண்டுக்குரிய செலவினங்கள் சரியாக கணக்குகளுக்கு கொண்டு வரப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2008 ஒக்தோபர் 16 ஆம் திகதிய 157 1/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 5(ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகள். | கட்டளைச் சட்டத்திற்கு முரணான கல்விச் சபை மற்றும் கலைச் சபையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கல்விச் சபையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிவிசேட வர்த்தமானியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் 1645 (ஆ), (இ), மற்றும் 1646. | நிறுவனத்தின் 08 வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் மீளாய்வாண்டின் போது உரிய காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | 1978 யூன் 26 ஆம் திகதிய 09 ஆம் இலக்க வழங்கல் மற்றும் நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1996 செப்தெம்பர் 16 ஆம் திகதிய 689 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | நிறுவகத்தின் நிரந்தர ஊழியர்களின் 04 வகைகளிற்குரிய 39 உத்தியோகத்தர்களுக்கான சீருடைகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகள் முறையாக இனங்காணப்பட்டு வழங்கப்பட்டிருக்க வேண்டும், மேலும் தையல் கட்டணங்கள் மீளளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் அனைத்து ஊழியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 1995 யூலை 14 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 636 ஆம் இலக்க | கல்விச் செயற்பாடுகள் தொடர்பான பரீட்சைகளின் பெறுபேறுகள் 03 மாத காலப்பகுதியினுள் வெளியிடப்பட வேண்டும், ஆனால் நிறுவனம் 2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட | தற்போது, சரியான நேரத்தில் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சுற்றறிக்கை. | 09 பரீட்சைகளின் பெறுபேறுகளை உரிய காலத்தில் வெளியிட்டிருக்காததால் 39 முதல் 238 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதம் அவதானிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான விவசாய-தொழில்நுட்ப மற்றும் கிராம விஞ்ஞான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 16,973,994 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 6,993,247 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 23,967,241 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தலாபம் ரூபா 831,094 ஆல் அதிகரித்திருந்த போதிலும் செலவினங்கள் ரூபா 4,267,507 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக மீளாய்வாண்டில் பெறப்பட்ட அரசாங்க மானியங்களின் ரூபா 14,650,000 அதிகரிப்பு உட்பட வருமானம் ரூபா 28,234,749 ஆல் அதிகரித்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் கால்நடை மற்றும் விவசாயப் பிரிவுக்கு முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் பிரிவின் அனைத்துப் பணிகளும் ஒரே ஒரு ஊழியரால் செய்யப்பட்டிருந்தன, மேலும் அந்த நடவடிக்கைகள் முறையான மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை. எனவே, அது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாகவே இருந்தது. மேலும், இந்த ஆண்டின் இறுதி வரையிலும் இருப்புக்கள் தொடர்பான மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த பிரிவை மேற்பார்வையிடுவதற்கு 2021 ஆம் ஆண்டில் பதில் பண்ணை முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். | கடமைகள் இனங்காணப்பட்டு அதிகாரங்கள் கையளிக்கப்பட வேண்டிய அதே நேரம் இருப்புக்களின் மெய்மையாய்வு மேற்பார்வை செய்யப்பட்டு நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு | கொவிட்-19 பரவுவதற்கு முன்னர் நடைமுறைப் | மேலதிக பொருட்கள் இனங்காணப்பட்டு |

| | | |
|---|---|---|
| அறிக்கையின் பிரகாரம் 10 வகைப் பொருட்களுடன் தொடர்புடைய 160 மிகைகள் காணப்பட்டன. ஆனால், முகாமைத்துவம் இது தொடர்பாக உரிய நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனைகளுக்காக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களாக அவை காணப்பட்டன. மாணவர்கள் வந்ததும் களஞ்சியங்கள் அவற்றை மீளப்பெறும். | பொருளிருப்பு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தங்களுக்கான உடன்படிக்கை காலப்பகுதியை நீடிப்பது தொடர்பாக, ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்ட காரணங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அத்தகைய நீடிப்புக்கள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 143,712,947 பெறுமதியான 04 ஒப்பந்தங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்களும் உள்ளன. அந்த ஒப்பந்தங்களுக்கான செயலாற்றல் பிணைமுறிகளின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதுடன், அது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக அவரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தாமதத்திற்கான தண்டப்பணங்களை அறவிடுதல் தொடர்பாக இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால நீடிப்புக்கள் வழங்கப்படாத ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, உடன்படிக்கைகளின் பிரகாரம் தாமதத்திற்கான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் இருந்த 30 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 மார்ச் 01 அளவில் கல்விசார் பணியாளர்களில் உள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. கல்விசாரா பதவியணியினரிலுள்ள வெற்றிடங்களுக்கு காலக்கிரமத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |